## மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்
## கும்முடிப்பூண்டி

| வழக்கு எண்: C.C. 133/2025 | காவல் நிலையம்: கும்மிடிப்பூண்டி | |
|---|---|---|
| பெயர் : ஜெயபாலன் | அ.சா. 3 | நாள் : 03.11.2025 |

அரசு தரப்பு சாட்சியான அ.சா. 3 என்பவரின் வாக்குமூலம் 1969 ஆம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு.தமிழரசன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயபாலன் | தாலுக்கா | : | கும்முடிப்பூண்டி |
| தந்தை பெயர் | : | நடராஜன் | தொழில் | : | போஸ்ட் மாஸ்டர்(ஓய்வு) |
| கிராமம் | : | மங்காவரம் | வயது | : | 69 |

( எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் மங்காவரம் கிராமத்தில் பூர்விகமாக வசித்து வருகிறேன். நான் இந்ததிய அஞ்சல் துறையில் போஸ்ட் மேனாக பணி செய்து ஓய்வு பெற்றுள்ளேன். 05.01.2021 ம் தேதி மங்காவரம் பொன்னியம்மன் கோவிலில் அதில் தலா கால் சவரன் எடை கொண்ட இரண்டு குண்டும், அரை சவரன் எடைகொண்ட ஒரு மாங்கல்யமும் திருடு போயிருந்தது. அதற்காக 05.01.2021 தேதியில் சிவா என்பவர் கும்மிடிப்பூண்டி காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளித்திருந்தார். அந்த புகார் சம்பந்தமாக கும்மிடிப்பூண்டி போலிசார் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

காணாமல் போனதாக கூறப்படும நகையை யார் திருடினார் என்று எனக்கு அப்போது தெரியாது இப்போதும் தெரியாது என்றால் சரிதான். புகார் கொடுப்பதற்கு சிவாவும், இராமச்சந்திரனும் சென்றார்கள். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள், வாக்குமூலமாக பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சம்மன் வந்தது காரணமாக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். கோவில் பூசாரி பெயர் முனுசாமி ஆகும். பூசாரி தான் நகையை திருடிவிட்டார் என்றாலும் அதை மறைப்பதற்காக எதிரி மீது தவறாக புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**(மறு விசாரணை இல்லை)**

ஓம்/- ஜெயபாலன்

திறந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் முன்னிலையில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SENTHIL KUMAR R

Digitally signed by SENTHIL KUMAR R
Date: 2025.11.03 12:37:13 +0530

மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
கும்முடிப்பூண்டி